ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1981/34 - 2016 අගෝස්තු මස 23 වැනි අඟහරුවාදා - 2016.08.23

*1981/34 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

**மீள் ஏற்றுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திர சாதனங்களையும் உபகரணங்களையும் அகற்றுவதற்காக 2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்க (திருத்த) சட்டத்தின் அட்டவணை "ஈ" இன் கீழ் சுங்கப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கான முறை**

2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்க (திருத்தம்) சட்டத்தின் அட்டவணை "ஈ" இன் ஏற்பாடுகளுடன், அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற விசேட கருத்திட்டங்களுக்காக மீள் ஏற்றுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட இயைபுமுறைப்படுத்தப்பட்ட பண்ட விபரக் குறியீட்டு முறைமையின் 84 ஆம் அத்தியாயத்தின் கீழ் வகைப்படுத்தப்படக்கூடிய, கீழே அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இயந்திரங்கள், இயந்திர சாதனங்கள், அவற்றின் பகுதிகள் ஆகியவற்றை அகற்றுவதற்கு சுங்கப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கான முறையொன்று இதன் மூலம் தாபிக்கப்படுகின்றது.

அதன் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற விசேட அரசாங்கக் கருத்திட்டங்களுக்காக மீள் ஏற்றுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட இயைபுமுறைப்படுத்தப்பட்ட பண்ட விபரக் குறியீட்டு முறைமையின் 84 ஆம் அத்தியாயத்தின் கீழ் வகைப்படுத்தப்படக்கூடிய, கீழே அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இயந்திரங்கள், இயந்திர சாதனங்கள், அவற்றின் பகுதிகள் ஆகியவற்றை அகற்றுவதற்கான சுங்கப் பெறுமதி, அத்தகைய இயந்திரங்கள் அல்லது இயந்திர சாதனங்கள், அவற்றின் பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் தாபிக்கப்படுகின்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| | | | சுங்கப்பெறுமதி |
|---|---|---|---|
| அத்தியாயம் 84 | இயந்திரங்கள், இயந்திர சாதனங்கள், அவற்றின் பகுதிகள் | 10 வருடங்கள் அல்லது அதற்கு மேல் | சீஐஎப் பெறுமதியின் 10% |
| | | 10 வருடங்களுக்குக் குறைவான ஆனால் 05 வருடங்களுக்கு மேல் | சீஐஎப் பெறுமதியின் 50% |
| | | 05 வருடங்களுக்குக் குறைவான ஆனால் 01 வருடத்திற்கு மேல் * | சீஐஎப் பெறுமதியின் 60% |

* மீள் ஏற்றுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட ஆனால் ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்திற்கு குறைவான பாவனைக் காலத்தைக் கொண்ட இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள், நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்படுமானால், இறக்குமதி செய்யும் வேளையில் நிலவிய வரி வீதங்களில் அகற்றப்படும்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட திகதிக்கும் தொடர்புடைய இயந்திரங்கள், இயந்திர சாதனங்கள், அவற்றின் பகுதிகள் ஆகியவற்றை அகற்றும் திகதிக்கும் இடைப்பட்ட காலம், பாவனைக் காலத்தின் கணிப்பீட்டுக்காக எடுத்துக்கொள்ளப்படும்.

அத்தகைய இயந்திரங்கள் அல்லது இயந்திர சாதனங்கள், அவற்றின் பகுதிகள் ஆகியவற்றை அகற்கும் வேளையில் செலுத்த வேண்டிய அரசிறை அறவீடுகள், அத்தகைய இயந்திரங்கள் அல்லது இயந்திர சாதனங்கள், அவற்றின் பகுதிகளை இறக்குமதி செய்யும் வேளையில் நிலவிய வரி வீதங்களில் கணிப்பிடப்படும்.

ரவி கருணாநாயக்க, பா.உ.
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01.
2016, ஓகத்து 23.

9-533

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.